செ.வெ.எண்: 571/2016 நாள்: 26.08.2016

## <u>பத்திரிகை செய்தி</u>

## <u>சிறுபான்மையின மாணவ/மாணவியர்களுக்கு கல்வி உதவித்தொகை விண்ணப்பங்களுக்கான கால நீட்டிப்பு</u>

தமிழ் நாட்டில் உள்ள அரசு, அரசு உதவி பெறும் மற்றும் அரசால் அங்கீகரிக்கப்பட்ட தனியார் கல்வி நிலையங்களில் 1-ம் வகுப்பு முதல் பி.எச்.டி. வரை பயிலும் மைய அரசால் அறிவிக்கப்பட்ட சிறுபான்மையினரான கிறித்துவர்/இஸ்லாமியர் / புத்த மதத்தினர்/சீக்கியர் பார்சி மற்றும் ஜெயின் வகுப்பைச் சார்ந்த சிறுபான்மையின மாணவ / மாணவியர்களுக்கு 2016-17 ஆம் ஆண்டிற்கு பள்ளிப்படிப்பு மற்றும் பள்ளி மேற்படிப்பு கல்வி உதவித்தொகை (புதுப்பித்தல் மற்றும் புதியது) விண்ணப்பிக்க ஏற்கனவே இத்துறை மூலம் 21.7.2016 மற்றும் 24.7.2016-ல் விளம்பரம் வெளியிடப்பட்டது. தற்போது மேற்படி பள்ளிப்படிப்பு மற்றும் பள்ளி மேற்படிப்பு கல்வி உதவித்தொகைக்கு விண்ணப்பிக்க 31.08.2016-லிருந்து 30.09.2016 வரை கால நீட்டிப்பு செய்யப்பட்டுள்ளது

சிறுபான்மையின மாணவ / மாணவியர்கள் மேற்படி கல்வி உதவித்தொகை பெற உரிய காலத்தில் விண்ணப்பித்து பயனடையுமாறு தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

(ஒ/ம்) சஜ்ஜன்சிங் ரா. சவான்,
மாவட்ட ஆட்சித்தலைவர்,
கன்னியாகுமரி மாவட்டம்

/உண்மை நகல் உத்தரவுப்படி/

\- மாவட்ட ஆட்சியருக்காக

---

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.**